# காத்தவராயர் மான்மியம்

அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானம்

50/- வருடாந்த உற்சவ கால ஆன்மிக இதழ் 2023



உ



**அல்வாயூர் எல்லையிலே இனிதமரும் குலதெய்வம்**
**பல்காலும் எல்லவர்க்கும் அருள் தெய்வம் - வல்லோனாய்**
**திரோதான சக்திதரும் காத்தான் உடனுறையும்**
**வரசித்தி விநாயகரை வாழ்த்து**

**- த.கலாமணி**

**இதழ் - 4** **காத்தவராயர் மான்மியம்** **2023**

வருடாந்த உற்சவ கால ஆன்மிக இதழ்

மெய்யடியார்களுக்கு வணக்கம்...

5 ஆவது வருடம் வெகு சிறப்பாக எமது ஆலய உற்சவம் நடைபெற்று வருகின்றது. காத்தானின் திருவருளால் நாம் அனைவரும் நல் வாழ்வு வாழ்ந்து வருகின்றோம். இந்த ஆண்டு பங்குனி மாதம் கும்பாவிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. கும்பாவிஷேகத்திற்கு பின்னர் அமெரிக்காவில் வதியும் எம்மவர் களான நவரத்தினம் சத்தியவதி தம்பதிகளால் நாகதம்பிரான் ஆலயம் வேலு சோதிடர், தம்பையா, தணிகாசலம் இராஜேஸ்வரி ஞாபகார்த்தமாக அமைக்கப் பட்டது. கனடா நாட்டில் வசிக்கும் எம்மவர்களான சுந்தரவேல் சகிலா தம்பதிகளால் சண்டேஸ்வரர் சுவாமியும் அமைக்கப்பட்டது. அவற்றிற்கான பிரதிஷ்டா கும்பா விஷேகமும் வெகு சிறப்பாக நடைபெற்றது. காத்தான் அடியார்களின் ஒன்றிணை வும் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள புரிந்துணர்வும், ஒன்றிணைந்து காரியங்களை ஆற்றும் திறனும் காத்தானின் விழாக்கள் சிறக்க காரணம் எனலாம். மேலும் இந்த ஆண்டு தெற்கு பக்க வெளி வீதி(14 அடி) சிவபாதவிருதையர் திருஞானசம்பந்தன் அவர்களால் கோயிலுக்கு என வழங்கப்பட்டுள்ளது, மேற்கு பக்க வெளிவீதியும் உற்சவகாலத்தில் இறைவன் வலம் வர திறந்து விடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு கும்பாவிஷேக இறுதி நாள் என்று எமது ஆலய ஊர்வலம் முதன்முறையாக இடம்பெற்றது. காத்தான் புகழ் என்றும் ஓங்குக. பக்திப் பரவசத்துடன் அன்புடன் வழிபடுபவர்களை காத்தான் என்றும் காத்து நிற்பான்.

- க.பரணீதரன்

ஆசிரியர் : க.பரணீதரன்
வெளியீடு : காத்தவராயர் தேவஸ்தானம்
தொடர்பு : கலைஅகம், அல்வாய்
தொலைபேசி:0775991949 FB : அல்வாய் காத்தவராயர்

**உள்ளே**

1. அல்வாய் அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தான மூர்த்திகள் மீதான துதிப்பாடல்கள்
- த.கலாமணி

2. சிறுவர்களது நலனில் மனித விழுமியப் பண்புகள்
- செ.சுரேந்திரா

3. தமிழரும் தமிழர் திருநாளும்
- சி.தங்கமயில்(நவராஜ்)

4. ஆலயக்கிரியைகள்
- வ.மிதூர்சா

5. காத்தவராயன் பாடல்
- செ.சுரேந்திரா

6. உடல் உள வலிகளாலும் வேதனைகளாலும் பெரும் ஆலயமாகியது காத்தவராயர் தேவஸ்தானம்
- ப.விஷ்ணுவர்த்தினி

## அல்வாய்

# அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தான மூர்த்திகள் மீதான துதிப்பாடல்கள்

காத்தான் கோயில் என அழைக்கப்பட்டு வந்த காத்தவராயர் தேவஸ்தானம் ஏறத்தாழ இருநூறு வருடப் பழமை கொண்டது; ஏழு தலைமுறைகளாக காத்தான் வழிபாடு தொடர்கிறது.

காத்தான் எமது குலதெய்வம்; அற்புதமான தெய்வம். காத்தானின் அற்புதங்களை நாம் தலைமுறை தலைமுறையாக அனுபவித்து வந்துள்ளோம். துன்பத்தில் நாம் வருந்தும்போது கனவிலே அவர் காட்சி தந்து ஆறுதல் தருவார். எமது நேர்த்திகளை நிறைவேற்றி வைப்பார். காத்தானின் மகிமைக்குச் சாட்சியாக விளங்குவது காத்தவராயர் தேவஸ்தானத்தின் இன்றைய ஆலய அமைப்பு முறை ஆகும்.

ஒதிய மரமொன்றின் கீழே நிறுவப்பட்டிருந்த திருத்தண்டும் இரு சூலங்களுமே இத்தேவஸ்தானத்தின் ஆதிமூலங்கள். திருத்தண்டை ஆதிவிநாயகர் என்றும் சூலங்களை காத்தான் என்றும் பணிக்கர் என்றும் எம் முன்னோர்கள் வணங்கி வந்திருக்கிறார்கள். பின்னர் ஒரு கொட்டிலில் இம் மூர்த்திகள் எழுந்தருளச் செய்யப்பட்டு விளக்கு வைத்துப் பூஜை செய்யப் பட்டது. ஆனி உத்தரத்திலன்று மடை பரவி படையல் செய்து நிவேதிக்கப் பட்டது. நாளடைவில் திருவெம்பாவைப் பூஜைகள் பத்துத் தினங்களும் இடம் பெற்றன. கொட்டில், சுண்ணாம்புக் கட்டடமாகவும் பின்னர் சீமெந்துக் கட்டடமாகவும் மாறியது.

2011 இல், பெரிய அளவில், மிகுந்த பணச்செலவில் புனரமைக்கப் பட்டது. மாமல்லபுரத்திலிருந்து கொண்டுவரப்பட்ட வரசித்தி விநாயகர் விக்கிரகம் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆதி விநாயகரான திருத்தண்டும் மூலஸ்தானத்திலேயே நிறுவப்பட்டது. காத்தவராயர் சூலமும் பணிக்கர் சூலமும் கதிர்காமத்திலிருந்து கொண்டு வரப்பட்ட இரு வேல் களும் ஒன்றாக மூலஸ்தானத்தை அடுத்தடுத்துள்ள மண்டபத்தில் நிறுவப் பட்டன. 2011 வைகாசிப்பூசத் தினத்தன்று குடமுழுக்கு இடம்பெற்று பூஜைகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. பின்பு பரிவார மூர்த்தங்கள் ஒவ்வொன்றாக பிரதிஷ்டை செய்யப்பட்டன. அலங்கார உற்சவம்

வருடந்தோறும் ஆவணி மாதம் பூசத்தினத்தை தீர்த்தோற்சவ தினமாகக் கொண்டு இடம் பெறத் தொடங்கியது.

இன்று ஆதிவிநாயகர், வரசித்திவிநாயகர், காத்தவராயர், பணிக்கர், மஹாவிஷ்ணு, கஜலஷ்மி, நாகதம்பிரான், வள்ளிதெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமி, வைரவர், சண்டேசுரர் ஆகிய மூர்த்திகளுடன் கூடிய தேவஸ்தானமாக வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானம் விளங்குகின்றது. ஆதிவிநாயகர் பிரமாணத்துக்கு அமைவான எழுந்தருளி, வரசித்தி விநாயகர் பிரமாணத்துக்கு அமைவான எழுந்தருளி என இரு எழுந்தருளிகள் இன்று திருவுலா வருகின்றன. உட்பிரகாரம், வெளிப்பிரகாரம் வழியாக வரசித்தி விநாயகர் திருவுலா வரும் காட்சி அழகுக் கோலம் காட்டி நிற்கின்றது.

காத்தான் கோயில், இன்று, வரசித்திவிநாயகர் உடனுறை தேவஸ்தானமாக பெயர் மாற்றம் பெற்று, சகல பரிவாரமூர்த்திகளுடன் விளங்குவதே காத்தானின் மகிமைக்கும் அற்புதத்துக்கும் சாட்சியாக விளங்குகின்றது என்பது மிகைப்பட்ட கூற்றுன்று.

இத்தேவஸ்தான மூர்த்திகளுக்கான துதிப்பாடல்களை எழுதி வெளியிட வேண்டுமென்ற நோக்கில், இத்துதிப்பாடல்கள் இங்கு இடம் பெறுகின்றன. இவை இசை அமைத்து கிருதிகளாகப் பாடத்தக்கன. இப்பாடல்களின் இறுவட்டும் எதிர்காலத்தில் வெளியிடப்படும்.

## 1. ஆதி விநாயகர் துதி

பல்லவி

ஆதி விநாயகா - எங்கள்
ஆதி முதல்வனே ஆரணனே அருளே

அனுபல்லவி

சித்தி எல்லாம் தரும் வரசித்தி விநாயகன்
அத்தி முகம் காட்டி தரிசனம் தந்திடும்

சரணம்

இருநூறு வருடப் பழமைகொள் திருவே
திருத்தண்டில் ஒளிரும் சோதியே சுடரே
தருவொன்றின் கீழ் ஸ்தாபனம் ஆனநீ
மருவி எம் குல தெய்வம் காத்தான் உடன் நின்றாய்
(ஆதி விநாயகா)

## 2. வரசித்தி விநாயகர் துதி

பல்லவி

வரசித்தி எல்லாம் தரும் வரசித்திவிநாயகா
காத்தான் உடனுறை தெய்வமே தொழுதோம்

அனுபல்லவி

ஓம் எனும் பிரணவ மந்திரப் பொருளே
தோம் என நடமிடும் தத்துவ முதலே

சரணம்

அம்மை உமாதேவி அன்பினில் உருவானாய்
இம்மையில் வல்வினைவேரறுத்தே களைவாய்
செம்மைமிகு வாழ்வு சிறக்க நீ அருள்வாய்
நும்மையே நம்பினோம் ஆரணமுதல்வா
(வரசித்தி)

## 3.காத்தவராயர் துதி

பல்லவி

எம்குலசாமி எம் குல தெய்வம்
எங்களைக்காக்கும் காத்தவராயா

அனுபல்லவி

மாரியின் புதல்வா கார்த்திகேயனே

சரணம்

ஓராயிரம் கனவை எந்தையர் சுமந்தார்
ஆராதனை செய்து ஆதரித்தே வந்தார்
சீரானநல் வாழ்வு அருளும் எம் குலதெய்வம்
ஊராரும் வணங்கும் தெய்வமும் ஆனாய்
(எம்குல)

## 4.மகாவிஷ்ணு துதி

பல்லவி

பாற்கடலின் மேலே பாம்பணை மீதே
பள்ளிகொள்ளும் அருந்த சயனா

அனுபல்லவி

ஓராயிரம் நாமம் பூண்ட நினைத்துதிக்க
நாராயணா என்ற நாமம் ஒன்றே போதுமே

சரணம்

சங்கு சக்கரம் ஏந்தி செகம் நீடு வாழ
எங்கும் நிறைந்து நின்று அகிலம் புரந்தருள்வாய்
தங்குதலம் தேர்ந்து தொல்சீர் பதிநாடி
இங்கு வந்தெங்கள் காத்தான் உடன் அமர்வாய்
(பாற்கடல்)

## 5. கஜலஷ்மி துதி

பல்லவி

கஜலஷ்மி தேவி அஷ்டலக்ஷ்மி வடிவே
கற்பகத் தாயே கதிநீயே அப்பா

அனுபல்லவி

கரங்கள் இரண்டில் கமலமலர் ஏந்தி
கருணை முகம்கொண்டு அபயகரம் காட்டும்

சரணம்

செல்வமும் புகழும் ஆளுமைத் திறனும்
இல்லங்கள் யாவும் பெருகிடச் செய்வாய்
நல்தேவ யானைகள் நீர் சொரியும் தெய்வம்
அல்வாயூர் சிறக்க காத்தான் பதி வந்தாய்
(கஜலஷ்மி)

### 6. வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணிய சுவாமி துதி

பல்லவி

வள்ளி தெய்வயானை சமேதராய் அமர்ந்த
சுப்பிரமணிய சுவாமி நினைப் பணிந்தோம்

அனுபல்லவி

துள்ளும் மயிலேறி உலகினை வலம் வந்த
தெள்ளு தமிழ்க்குமரா தேவசேனாபதியே

சரணம்

மாரியின் புதல்வனாய் அவதரித்தாய் என்றே
சீரிய பழம்நூல் செப்பிய மொழி கேட்டோம்
நேரிய வாழ்வு தந்து நிறைந்த திருவருளை
வாரி வழங்கும் வள்ளல் வரதா சரணம்
(வள்ளி)

### 7. நாக தம்பிரான் துதி

பல்லவி

எம்குல தெய்வம் காத்தான் கோயிலிலே
நம்பிக்கை நாம் தொழ வந்தவனே சிவனே

அனுபல்லவி

நாக தம்பிரான் என்றே நாமெலாம் வழிபட
நாகமதன் நிழலில் காட்சிதரும் சிவனே

சரணம்

முப்புரமெரி செய்த அச்சிவன் மென்நகையும்
முப்புரி நீறிலங்கும் முகமலரும் கொண்டு
இப் புவியுளோரெலாம் கசிந்துளம் கரைந்திட
ஒப்பிலா அருள்தரும் நாக தம்பிரானே
(எம் குல)

## 8. வைரவர் துதி

பல்லவி

அடியவர் பணிந்திடும் வைரவரே
மிடியுடன் துயர் போக்கும் சிவனார் வடிவே

அனுபல்லவி

நீல நிறத்து மேனியனே
நிர்மலனாக நிற்பவனே

சரணம்

சனி பகவானின் குருவாய் ஆனவனே
ஆணவப் பிரம்மன் தலைகொய்தவனே
நோய்நொடி தீர்த்து தடைகளைக் களையும்
தேய்பிறை அஷ்டமி நாயகனே போற்றி
(அடியவர்)

## 9. பணிக்கர் துதி

பல்லவி

பணி செய்யும் அடியார் தம் பிணிகளைப் போக்கிடும்
பணிக்கர் சுவாமி பதம் பணிந்தோமே

அனுபல்லவி

கழுமரம் ஏறும் எம் குலதெய்வம் காத்தானொடு
தோழமை பூண்டாய் சேர்ந்துடன் நின்றாய்

சரணம்

மாந்திரீக வித்தகன் மாவீரனும் நீ
பாந்தமுடன் மக்கள் வணங்கிடும் தெய்வம் நீ
மடைகள் பரவி படையலும் செய்தால்
தடைகளை நீக்கும் பணிக்கர் சாமி நீ
(பணி செய்யும்)

## 10. சண்டேசுரர் துதி

பல்லவி

தொண்டருக்கெல்லாம் தலைவராய் விளங்கும்
சண்டேசுர மூர்த்தி நினைத்தினம் துதி செய்தோம்

அனுபல்லவி

வேத மந்திரம் ஓதும் வேதாகம ஞானி
தாதையையும் தண்டிக்கும் தத்துவஞானி

சரணம்

ஆநிரை மேய்த்து ஆசொரியும் பாலால்
அபிஷேகமும் செய்து சிவலிங்க பூஜை செய்தாய்
மாநிலம் போற்றும் நின் அன்பினால் மகிழ்ந்தீசன்
மேனிலை தந்து மக்கள் பூஜிக்கவும் வைத்தார்.
(தொண்டருக்கெல்லாம்)

**ஆக்கம் : கலாநிதி த.கலாமணி**

# சிறுவர்களது நலனில்
# மனித விழுமியப் பண்புகள்

மனிதனுடைய வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் மனித விழுமியப் பண்புகள் தேவை என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். நாம் எமது வாழ்வில் போற்றி வளர்க்க வேண்டிய உயர்வான விழுமியப் பண்புகளை சிறுவயது முதல் வளர்க்க வேண்டியது அனைவரது கடமையுமாகும். மனிதனை மனிதனாக வாழ வைப்பது மனித விழுமியப் பண்புகள் ஆகும் என சமயங்கள் வலியுறுத்துகின்றன. மனிதனின் ஒழுக்கம் என்பது மனித விழுமியங்களினாலேயே ஆளப்படுகின்றது. எனவே ஒழுக்கத்தை ஒருவன் தனது உயிரினும் மேலாக ஓம்பிப் பேணி வர வேண்டும். இதனை வள்ளுவப் பெருந்தகை "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்றார்.

ஒழுக்கத்திலும் ஆன்மீக சாதனையிலும் வெற்றி பெறக் கூடியவனே எல்லா நிலைகளிலும் எப்போதும் நிறைவு பெற்றவனாக இருப்பான். இவ்வகையான ஆளுமைத் தன்மையை மனிதனுக்குள் ஏற்படுத்துவதே அவன் கற்றுக் கொள்ளும் அறநெறிக்கல்வியாகும். அறநெறிக் கல்வியின் சிறந்த குறிக்கோள் "பண்புடமையே" ஆகும். அதாவது சமூகத்தில் நல்ல பிரஜையாகவும் ஒழுக்க சீலராகவும் நல்ல பண்புகளை கொண்ட மனிதராக வளர்ப்பது ஆகும்.

பொதுவாக கல்வி கற்பதற்கான நோக்கமும் நல் ஒழுக்கத்துடன் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும். இதனையே வள்ளுவப் பெருத்தகை

"அரம்போல் கூர்மையுடையேரேனும்
மரம் போலாவார் மக்கட் பண்பில்லாதோர்"

அதாவது கல்வி கற்று நல்ல அறிவு இருந்தும் சமூகத்தில் நல்ல சமூகத்துடன் வாழாதவர்கள் சமூகத்தில் நல்ல உறவுகளை பேணாதவர் களாக காணப்படுவார்கள்.

மனித விழுமியப் பண்புகளில் முதன்மையானதாகவும் அனைத் திற்கும் அடிப்படையானதாகவும் விளங்குவது அன்பென்னும் ஆணி

வேர்தான். அன்புதான் இந்த உலகின் மகா சக்தி. அந்த சக்தியினை அடி நாதமாகக் கொண்டு மாணவர்களுக்கு சிறுவயது முதலே அவர்களது நடத்தை தொடர்பில் சரியானவை எவை? பிழையாவை எவை? என்பதை முறைப்படுத்திக் கூறி, அவற்றைக் கைக்கொள்ள பழக்கிக் கொள்ள வேண்டும். மேலும் சிறுவயது முதல் மாணவர்கள் இறை நம்பிக்கை, உண்மை பேசுதல், நேர்மை, நேரம் தவறாமை, மகிழ்வோடு வாழப்பழகுதல், கீழ்ப்படிதல், அனைவரிடத்திலும் அன்பு செலுத்துதல், எமது கருமங்களை நாமே செய்யப் பழக்குதல், பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மையை வளர்த்தல், உயிர்கள் மீது கருணை காட்டுதல் என இன்னோரன்ன விழுமியப் பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

எனவே சிறுவர்களது வாழ்வு தனிமயமானதாகவும் அவர்களின் எதிர்காலம் சுடர்விட்டு பிரகாசிப்பதற்கு மனித விழுமியப் பண்புகளை கடைப்பிடிப்போமாக.

**ஆக்கம் - தர்மாசிரியர் செல்லத்தம்பி சுரேந்திரா அதிபர்,**
**அல்வாய் சாமணந்தறை**
**ஆலடிப்பிள்ளையார் ஆலய அறநெறிப் பாடசாலை**

# தமிழரும் தமிழர் திருநாளும்

ஐப்பசியில் கோவர்த்தன பூஜை செய்த ஆயர்பாடி மக்கள் மேல் இந்திரதேவன் கடும் கோபம் கொண்டு 3 மாதங்கள் கடும் மழையை பொழி கிறார். அண்டம் அனைத்தையும் தனது திருவடியின் கீழ் அளந்த கண்ணன், குன்றம் ஏந்தி குளிர் மழையில் இருந்து மக்களையும் பசுக்களையும் பாது காத்தார். அடைமழையில் பசுக்கள் அனைத்தும் பால் கொடுத்து மக்களை பாது காத்தன. மார்கழி முடியும் நாள் இந்திரன் தனது தவறை உணர்ந்து மழையை நிறுத்துகிறார். ஆயர் பாடிக்கு மக்கள் திரும்புகின்றனர். தமது வீடுகளில், மழையில் நனைந்த பழைய பொருட்களை எல்லாம் வீதிகளில் போட்டு தீயிட்டுச் கொளுத்துகின்றனர். இதுவே போகி பண்டிகை என இந்தியாவில் பொங்கலுக்கு முதல் நாள் கொண்டாடுகின்றனர். ஆனால் இது எமது இலங்கை நாட்டில் கொண்டாடப்படுவதில்லை.

வீடுகளை சுத்தம் செய்து வெள்ளை அடித்து மாவிலை தோரணம் கட்டி அலங்கரிக்கின்றனர். மறுநாள் உலகனைத்தையும் காக்கின்ற சூரிய நாராயணரின் அருள் வேண்டி புதுப்பானையில் மங்களமாக பொங்கல் வைத்து படையலிட்டு வணங்குகின்றனர். மறுநாள் தமக்கு அடைமழையில் உண வளித்து பாதுகாத்த பசுக்களுக்கு விழா எடுத்து வணங்கினர். இதுவே தாம் சிறப்பாக பொங்கல் கொண்டாடும் வைபவமாகிறது. போகி பண்டிகை ஆனது பழையன கழிதலும் புதியன புகுதலும் எனும் முதல் நாளில் இருந்தே மக்கள் பரபரப்பாக இயங்கத் தொடங்குகின்றனர். வீட்டில் பழைய பொருட்கள் இருந்தால் வீட்டுக்கு ஆகாது என முன்னோர்கள் சொல்வது இதனால் தான், பொங்கலுக்கு முதல் நாளே மக்கள் வீடு வாசல்களை துப்பரவாக்கி பொங்கல் விழாவுக்கான சோடினை அலங்கார வேலைகளை பரபரப்பாக செய்யத் தொடங்கிவிடுவார். இதனால் குழந்தைகள் மட்டுமல்லாது பெரியார்களும் சுறுசுறுப்பாகி விடுகின்றனர். மறுநாள் விடியற் காலையில் பெரியவர்கள் பொங்கல் ஆயத்தங்களை செய்ய, சிறார்கள் அதனை ரசிப்பது மட்டு மல்லாது பொங்கிச் சரியும் வேளை பட்டாசு கொழுத்தி ஆரவாரிக்கின்றனர்.

பால் பொங்கி வழியும் வேளை பெரியோர்கள் தங்களின் வேண்டுதல் கள் அனைத்தும் பொங்கி வழிய வேண்டுமென இறைவனிடம் வேண்டி பிரார்த் திக்கின்றனர். அதனிடையே சிறார்களும், பெரியவர்களும் தம் புத்தாடைகளை

அணிந்து அழகு பார்த்து மகிழ்கின்றனர்.

வயது முதிர்ந்த பெரியோர், சிறுவர்களுக்கு பண்டிகையின் வரலாறு சொல்லி இறைபக்தியை ஊட்டுகின்றனர். சிறார்களும் தம் மனதில் அவற்றை பதிய வைத்து விழாவை கொண்டாடுகின்றனர். பொங்கல் பொங்கி இனிதே முடிந்ததும் சூரிய பகவானுக்கு படையலிட்டு பின் இதர சுவாமிக்கும் படைய லிட்டு திருப்தி காண்கின்றனர். அன்றைய காலங்களில் ஏழைக் குடும்பங் களுக்கு தாம் சமைத்த பொங்கல் மற்றும் பழவகைகளை பரிமாறி மகிழ்ந்து தாமும் உண்டு மகிழ்ந்தார்கள். இதனால் பெரியவர்கள் மட்டுமல்லாது சிறார் களுக்கும் சமத்துவத்தை கற்றுக் கொடுக்கின்றனர். அன்றைய தினம் முழுவதும் உறவினர்களின் வீடுகளுக்கு செல்வதும், குழந்தைகள் பட்டாசு கொழுத்தியும், விளையாட்டுகளில் ஈடுபட்டு பூரிப்படைகின்றனர்.

மறுநாள் பட்டிப் பொங்கல் செய்தவற்காக தொழுவங்களை சுத்தப் படுத்தி மாடுகள், ஆடுகளை குளிப்பாட்டி அலங்கரித்து பொங்கல் பொங்கி பசுக் களை பூஜித்து வழிபடுகின்றனர். பசுக்கள் அனைத்திலும் முப்பது முக்கோடி தேவர்களும் உறைவதாக புராணங்கள் சொல்கின்றன. அத்துடன் பசுக்களை பெற்ற தாய் போல் பராமரிக்க வேண்டும் என்கின்றன புராணங்கள். அவை தரும் பாலினால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ஊட்டச்சத்தை பெறு கின்றன. பசுக்கள் உள்ள வீடுகள் இலட்சுமி வாசம் செய்யும் இல்லமாக அமை கிறது. பசு தரும் இதர பொருட்கள் கோமீயம், கோமளம், பால், தயிர், நெய் என்பவற்றை கலந்துபஞ்ச கௌவியம் எனும் பூஜைக்கு உகந்ததிரவியம் தயாரிக் கப்படுகிறது. பூசை புனஸ்காரங்களின் போது இதனை சிறிது அருந்துவதாலும் மற்றும் தீட்டு துடக்குகளை போக்கும் அருமருந்தாகவும் பயன்படுகிறது.

அது மட்டுமல்லாது ஒருவர் உயிருடன் இருக்கும் காலத்தில் பசு தானம் எனும் கோதானம் செய்வதனால் இறைவன் திருப்தியடைந்து அவர்களின் இறுதிக் காலத்தில் இறை தூதர்கள் வந்து அவர்களின் ஆத்மாவை நற்கதிக்கு அழைத்துச் செல்வதாக கருட புராணம் முதல் ஏனைய புராணங்களும் கூறுகின்றன. இதனால் பசுவை நாம் சுகமாக உள்ள போது நிறைந்த அந்தணர்களுக்கு தானமாக கொடுக்க வேண்டும் என்பது எமது கடமை.

சிவன் கோவில்களில் நித்தியப் பெருமானை வழிபட்டே பின் சிவனாரை வழிபட வேண்டும் என்பதே நியதி. இவ்வாறு பல அற்புதமான சிறப்புக்கள் கொண்டவை தான் மாடுகள். மாடு என்றால் அதன் நிறை பொருள் செல்வம் என்பது தான். அவை எமக்கு செல்வத்தை தருவது மட்டுமல்லாது எம்மை மோட்சத்துக்கும் செல்ல வழி செய்கின்றன. இதனால் தான் கோவினத்தை சிறப்பாக பராமரிக்க வேண்டும்.மற்றும் கோபூசை செய்வதனால் குழந்தை வரம் அருளக் கூடிய சிறப்பும் சொல்லப்படுகிறது. இவ்வாறு பற்பல சிறப்பு மிக்க கோவினத்தை பொங்கல் பொங்கி கொண்டாடுவதனால் நம் கர்ம வினைகள் நீங்கி நாமும் சுபீட்சம் பெறுவோமாக…

**ஆக்கம் - சி.தங்கமயில்(நவராஜ்)**

# ஆலயக்கிரியைகள்

**01. மகோற்சவம்**

ஆலயங்களில் தினமும் நடைபெறும் கிரியைகள் நித்திய கிரியைகள் என்றும் விஷேடமாகச் செய்யப்படும் கிரியை நைமித்திய கிரியை எனவும் அழைக்கப்படும்.

இக்கிரியை வாரம், மாதம், வருடம் எனும் காலங்களில் வரும் விசேட தினங்களைச் சிறப்பாக கொண்டு நடைபெறும். நித்திய பூசைகளில் ஏற்படும் குறைகளை நீக்கும் பொருட்டு நைமித்திய பூசை நடைபெறும். வருடம் ஒரு முறை நடைபெறுவது மகோற்சவம் ஆகும். மகா என்பது பெரிய என்றும் உற்சவம் என்பது விழா எனவும் பொருள்படும். ஆன்மாக்களின் மலத்தை நீக்கி வீடுபேற்றை கொடுக்கும் பெரியவிழா என்று பொருள்படும். நைமித்தியக் கிரியைகளில் மகோற்சவம் சிறப்பானதொரு கிரியை ஆகும். இக்கிரியையானது இறைவனின் ஐந்தொழில்களை நினைவூட்டுகிறது. கொடிமரம் உள்ள ஆலயங்களில் கொடியேற்றம் தேர், தீர்த்தம் போன்ற உற்சவங்களும் கொடிமரமில்லா ஆலயங்களில் அலங்காரத் திருவிழாக்களும் இடம் பெறும்.

ஆலயத்தில் மகோற்சவம் தொடங்கிவிட்டால் மக்கள் வாழ்க்கையிலும் ஓர் உயிர்த்துடிப்பு ஏற்படுகிறது. மக்கள் வாழ்க்கையிலும் ஓர் உயிர்த்துடிப்பு ஏற்படுகிறது. இயந்திரமான வாழ்க்கை வாழுகின்ற மக்களது மனத்தின் சலிப்பை அகற்றி, உற்சாகத்தையூட்டி, மனப்பூரிப்பை ஏற்படுத்தி வாழ்க்கையில் பிடிப்பு ஏற்பட வழிவகுக்கின்றது.

மக்கள் ஒன்று சேர்த்து கோயிலையும் வீதிகளையும் சுத்தம் செய்து குலைவாழைகள் நாட்டி, தோரணங்கள் தொங்கவிட்டு, அலங்கரிப்பர். வீடுகளை சுத்தம் செய்வதுடன் விரதமும் மேற்கொள்வர்.

### மகோற்சவ கிரியைகள்

**அனுமதி பெறுதல் (அனுக்ஞை)**

கொடியேற்ற உற்சவம் செய்யும் ஆச்சாரியார். ஒரு தட்டில் பச்சையரிசி பரப்பி இரண்டு தேங்காய் வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, சந்தனம், மஞ்சள், பூ, மாவிலை, தர்ப்பை என்பவற்றை வைத்து தீர்த்தம் தெளித்து பூசை

நிகழ்த்துவர். பின்பு அங்கு வந்திருக்கும் ஏனைய ஆச்சாரியார்களிடம் ஆசிபெற்று, பிள்ளையார், மூலமூர்த்தி அஸ்திரதேவர், உற்சவமூர்த்தி ஆகிய தெய்வங்களுக்குப் பூசை ஆராதனை ஆற்றி உற்சவத்தை நன்முறையில் நடத்த அனுமதியும் ஆசியும் தந்தருளுமாறு வேண்டுவார்.

**கிராமசாந்தி**

தீய சக்திகளால் பெருவிழாவிற்கு இடையூறு ஏற்படாமல் மங்களம் உண்டாகும்படி காவற் கடவுளரான பைரவ மூர்த்திக்கு ஆற்றப்படும் கிரியை கிராமசாந்தி ஆகும்.

**வாஸ்துசாந்தி**

நிலத்திலுள்ள குற்றங்குறைகளை நீக்குவதற்காக ஆலய மண்டபத்தில் அக்கினி காரியத்துடன் செய்யப்படும் கிரியை, வைக்கோல், தர்ப்பை முதலியவற்றால் செய்யப்பட்ட வாஸ்து புருஷனைப் பூசித்து சிவாக்கினியில் அரியச்செய்து பின் அவ்வுருவத்தை ஆலய மண்டபங்கள் வீதிகள் முதலிய இடங்களில் இழுத்துவந்து வடக்கு மூலையில் போட்டு விடுவர். வெட்டிய நீற்றுப் பூசணிக்காயில் குங்குமம் பூசப்பட்டு இதனுடன் எடுத்து சென்று போடப்படும் இக் கிரியையினால் இடசுத்தி ஏற்படுகிறது.

**மிருத்சங்கிரகணமும் அங்குரார்ப்பணமும்**

மண்ணை மந்திர சகிதமாக பெறுவதே மிருத்சங்கிரகணமாகும். நற்காரியங்களை தொடங்கும் போதும் நவதானியம் இடுதல் முக்கியமாகச் செய்யப்படும் இதனை "பாலிகையிடுதல்" என்பர். ஆலயத்தின் வடகிழக்கு அல்லது வடக்கு திசையில் இது செய்யப்படும். அங்குரார்ப்பண முறையானது நன்கு செழித்து வளர்ந்தால் நாட்டிலே தானிய விருத்தி சிறக்குமென்பது ஐதீகம்.

மேற்குறிப்பிட்ட கிரியைகள் யாவும் கொடியேற்ற விழா நடைபெறுவதற்கு முதல்நாள் இரவு நடாத்தப்படும் கிரியைகளாகும்.

**இரட்சாபந்தனம்**

விழாக்கள் இடையூறின்றி நிறைவேற வேண்டுமென வேண்டுதல் செய்து ஆச்சாரியார் தனக்கு உற்சவ மூர்த்திகளுக்கும் காப்பு கட்டுவர்.

இதனை தொடர்ந்து உலகெங்கும் நன்மை உண்டாக வேண்டி ஆச்சாரியார் மூன்றுமுறை மேளமடிப்பார்.

**கொடியேற்ற உற்சவம்**

கொடியேற்ற உற்சவம் மூலமூர்த்திக்குரிய ஊர்தியின் முன்னால் இடம்பெறும் கொடிச்சீலையில் மூலமூர்த்திக்குரிய ஊர்தி அடையாளம்

முதலியவற்றோடு கண்ணாடி, சூரிய சந்திரர், பூரண கும்பம் முதலியனவும் வரையப்பட்டிருக்கும்.

**மூலமூர்த்திகளும் அடையாளங்களும்**

சிவாலயம் : இடபமும் சூலமும்

விநாயகர் ஆலயம் : மூசிகமும் அங்சமும்

சுப்பிரமணியர் ஆலயம் : மயிலும் வேலும்

சக்தி : சிங்கமும் சூலமும்

கொடியேற்ற தினத்தன்று உற்சவமூர்த்தியை அலங்கரித்து கோயிலை வலம்வந்து கொடித்தம்பத்திற்கு முன்னால் எழுந்தருளச் செய்வார். ஆச்சாரி யார் ஒருவரால் கொடிச்சீலை உள்வீதி வலமாக கொண்டு வரப்பட்டதும் மூல மூர்த்தியின் சந்திதானத்தில் பூசை வழிபாடு ஆற்றப்படும் அதன் பின்னர் கொடித்தம்பத்திலுள்ள கயிற்றுடன் கொடிச்சீலையை இணைத்து வேதபாராயணத்துடன் கிரியைகள் ஆற்றுவர்.

சகல வாத்தியங்களுடனும் ஆச்சாரியார்களின் வேதபாரயணத் துடனும் கொடியை கொடிக்கம்பத்தில் ஏற்றுவர். கொடிச்சீலையின் மறு முனை யைக் கொடித்தம்பத்தில் வலமாக சுற்றி வந்து தம்பத்தின் அடியில் கட்டுவர்.

இதனை தொடர்ந்து அலங்காரம் இடம்பெறும். பின் அவிப்பொருள் பலியிட்டதும் கொடித்தம்பத்திற்கு தூபதீப ஆராதனைகள் இடம்பெறும். கொடியேற்றும் ஆச்சாரியார் திக்குப்பாலகரைத் தியானித்து அவர்களுக்குரிய வேதமந்திரம், ராகம், பண், தாளம், வாத்தியம், நிருத்தம் முதலியவற்றுடன் இறையருளைக் கொடித்தம்பத்தில் ஆவாகிப்பர்.

தீர்த்த உற்சவத் இடம்பெறும் தினமும் இருவேளைகளிற் கொடித் தம்பத்திற்கு அபிஷேக பூசையாராதனைகள் ஆற்றப்படும்.

உற்சவ மூர்த்திக்கும் விசேடமாக அலங்காரத்துடன் ஆராதனைகள் இடம்பெறும். வேதபாராயணம், திருமுறையோதல் என்பவற்றுடனும் தீ வர்த்தி, கொடி, குடை முதலிய அலங்காரங்களுடன் உள்வீதி நிகழும். உற்சவமூர்த்தி வடகிழக்கு மூலையை அடைந்தவுடன் யாகசாலையில் பூர்ணாகுதியும் ஆராதனையும் நடைபெறும். இதன் பின் உற்சவமூர்த்தி வெளிவீதியுலா வருவார்.

கொடியேற்றம் தொடக்கம் தீர்த்தத்திருவிழா வரை நடைபெறும் உற்சவங்கள் இறைவனின் பஞ்சகிருத்தியங்களைக் குறிப்பன.

**கொடியேற்றம் - படைத்தல்**

அங்குரார்ப்பணம், இரட்சாபந்தனம், கொடியேற்றம் திருக்கல் யாணம் ஆகியன இறைவனின் படைத்தல் தொழிலை குறிக்கின்றன.

கொடிமரம் பதியையும் அதில் சுற்றப்பட்ட சீலை பசுவையும் சீலையை சுற்றியுள்ள கயிறு பாசத்தையும் குறிக்கும். ஆசைகள் சம்மந்தமாக ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் இடையேயுள்ள தொடர்பைக் கொடிமரம், கயிறு, சுற்றிய சீலை ஆகியன காட்டுகின்றன. கொடியேற்றம் என்பதன் பொருள் ஆணவம், வலிமை இழந்து, ஆன்மா ஆசை நீக்கம் பெறுதற் பொருட்டு திருவருளாகிய கொடியை ஏற்றுதல் என்பதாகும்.

**வாகனத்திருவிழா - காத்தல்**

வாகனத்திருவிழா, அக்கினிகாரியம், பலி என்பன காத்தல் தொழிலைக் குறிப்பனவாகும். வாகனத்திருவிழா நடக்கும் நாட்களில் உற்சவமூர்த்திகள் உரிய ஊர்திகளில் திருவுலா வருவார்.

**தேர்த்திருவிழா - அழித்தல்**

தேர்கள் பலவகைப்பட்ட சில்லுகளையும் உறுப்புகளையும் கொண்டு விளங்குவனவாகும். இவை நான்கு பிரிவுக்குள் அடக்கப்படும்.

- சதுரவடிவம் : நாகரம்
- எண்கோணவடிவம் : திராவிடம்
- வட்டவடிவம் : வேசரம்
- அறுகோண வடிவம் : அந்தரம்

தேர்த்திருவிழா, சூர்ணோற்சவம் என்பன அழித்தல் தொழிலை குறிப்பனவாகும். பல பிறவிகளில் பிறந்திருந்து உழலும் உயிர்களை இளைப்பாற வைத்தல் அழித்தல் எனப்படும்.

**தீர்த்தத்திருவிழா - அருளல்**

உற்சவமூர்த்தி அஸ்திர வேருடன் தீர்த்தம் நிகழும் இடத்தில் அஷ்திர தேவருக்கு முறைப்படி அபிசேகம் நடைபெறும். முதலில் ஆச்சாரியாரும் அஸ்திரதேவரும் தீர்த்தமாடுவர். இதனை தொடர்ந்து அடியார்களும் தீர்த்தமாடுவர் உயிர்களை பக்குவநிலையில் ஆசைகளை ஒழித்து வீடுபேறு எனப்படும் முத்தி அடைதலை இது குறிக்கும். மாலையில் கொடியிறக்கம் இடம்பெறும்.

**மௌன உற்சவத் திருவிழா மறைத்தல்**

உயிர்களிடம்நன்மை தீமை இரண்டையும் ஒன்றாக எண்ணும் மனநிலை மௌன நிலை வருவித்து மலங்களை முதிர்விக்கும் அருட்செயல் மறைத்தல் எனப்படும். இதை தொடர்ந்து சண்டேஸ்வர உற்சவமும், ஆச்சாரிய உற்சவமும் நடைபெறும்.

**திருக்கல்யாணம்**

தீர்த்தத்திருவிழாவையடுத்து மறுநாள் இடம் பெறும் உற்சவம் திருக்கல்யாணம் ஆகும். இது நம் போன்ற சாதாரண மக்கள் செய்யும் கல்யாணம் போன்றதன்று என்பதை நாம் உணர வேண்டும்.

திருக்கல்யாணம் என்பது அருள்வடிவமான சக்தி அறிவுமயமான இறைவனோடு கலந்து உலகை இயங்க வைப்பதைக் குறிக்கும். இதில் திருவூஞ்சலும் நடைபெறுவதுண்டு.

**பூங்காவனம்**

திருக்கல்யாணம் உற்சவம் இடம் பெற்றதன் மறுநாள் பூங்காவன உற்சவம் இடம்பெறும். மக்களிடம் உள்ள கலையாற்றலை வெளிப்படுத்து வதற்காகவும் அதனால் மக்களின் மனதில் உற்சாகத்தை ஏற்படுத்துவதற் காகவும் இவ்வுற்சவம் இடம்பெறும். கடவுள் எங்கும் நிறைந்தவர் என்பதை இவ்வுற்சவம் குறிக்கின்றது.

**2. கும்பாபிஷேகக் கிரியை விளக்கம்**

இறைவன் ஆலயத்திலே சிறப்பாக நிற்கும் பொருட்டு செய்யப்படும் மங்களகரமான கிரியைகள் கும்பாபிஷேகம் என்று அழைக்கப்படும். ஓர் ஊரில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றால் ஊர்ச் சிறப்பு, நகரச்சிறப்பு, மக்கள் செல்வச்சிறப்பு, உயர் கல்விச் சிறப்பு, மனதில் சாந்தி, உலக நன்மை என்பன கிடைக்கும். இறைவன் பரம் பொருளாக வைத்துப்பேசும் சிறப்பு நூல்களே சிவாகமங்கள் ஆகும். சிவாகமங்கள் இருபத்தெட்டிலும் இறைவனை வழிபடும் முறையை விளக்கும் பகுதியே கிரியாபாதம் எனப்படும். இதில் கிரியைகளுக்கே முதலிடம் அளிக்கப்படும் திருக்கோயில்களில் செய்ய வேண்டிய கிரியைகள் மூன்று பகுதிகளாக அவை கூறுகின்றன.

- கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம்
- பிரதிஷ்டாதி உற்சவாந்தம்
- உற்சவாதி பிராயச்சித்தாந்தம்

கிரியைகளின் கிரமங்களை நோக்கும் போது கர்மாரம்பம் முதல் யாகாரம்பம் வரையுள்ள சாந்தி கர்மாக்கள் "பூர்வாங்கம்" எனவும் யாகபூஜை முதல் மண்டலாபிஷேகம் வரையான கிரியைகள் "உத்தராங்கம்" எனவும் அழைக்கப்படும்.

## கும்பாபிஷேகத்திற்குரிய சில முக்கிய கிரியைகள்

**பூர்வாங்கம்**

- முகூர்த்த நிர்ணயம் - கும்பாபிஷேகத்திற்குரிய நாளை தெரிவு செய்தல்

- ஆச்சார்ய வரணம் - சிவாச்சாரியாரை கோவில் யஜமானன் தேர்ந்தெடுத்தல்
- திரவிய விபாகம் - கும்பாபிஷேகத்திற்குரிய திரவியங்களை பகிர்ந்து கொள்ளல்
- திரவிய சுத்தி - திரவியங்களைத் தூய்மைப்படுத்தல்
- அனுக்ஞை - உத்தரவு பெறுதல்
- கணபதி ஹோமம் - கணபதியை குறித்து செய்யப்படுவது
- கிராம சாந்தி - கிராமத்தில் வசிக்கும் பிரம்ம ராட்சதர்கள், பூதங்கள் முதலியவற்றால் வரும் தோஷநீக்கம்
- பிரவேச பலி - அசுரர்கள் ராட்சதர்கள் ஆகியோரால் வரும் இடையூறுகள் நீங்க
- ரக்ஷோக்ன ஹோமம் - யாகசாலை மத்தியில் நிறுவிய கும்பத்தில் ரக்ஷோக்ன தேவதையை அவாகித்து வழிபடல்
- திசா ஹோமம் - ஆலயத்தின் முன்பக்கத்திலிருந்து நான்கு திக்கிலும் அகோர பாசுபத, பிரத்தியங்கிர அஸ்திரர்களை வழிபாடு செய்து புரோட்சனம் செய்தல்
- நவக்கிரக ஹோமம் - ஒன்பதுகிரகங்களை வழிபாடு செய்தல்
- வாஸ்து சாந்தி - வாஸ்து நாதரை வழிபட்டு பூமிசம்மந்தமான தோஷங்களை நிவர்த்தி செய்வதற்கு

**உத்தராங்கம்**

- மிருத்சங்கிரகணம் - மண் எடுத்தல்
- அங்குரார்ப்பணம் - பாலிகைச் சட்டியில் தானியம் விதைத்தல்
- ரட்சாபந்தனம் - சிவாச்சாரியாருக்கு காப்பு கட்டுதல்
- நயனொன்மீலனம் - நூதனமூர்த்திகளுக்கு கண் திறத்தல்
- ஜலாதிவாசகம் - நீரில் விக்கிரங்களை கிழக்குமுகமாக நிறுத்தல்
- தான்யாதிவாசம் - தானியங்களை விக்கிரங்களுக்கு இடுதல்
- பிரசன்னாபிஷேகம் - இறைவனை எழுந்தருளப் பண்ணுதல்
- கடஸ்தாபனம் - கும்பங்களை அமைத்தல்
- கலா கர்ஷணம் - விம்பத்திலுள்ள கலைகளை கும்பத்தில் சேர்த்தல்
- யாக சாலாப் பிரவேசனம் - கும்பம் யாகசாலைக்கு எழுந்தருளல்
- அக்கினி கார்யம், அக்கினி விபசனம் - அக்கினியை குண்டத்துக் கமைய பிரித்தல் வசதி கேற்ப ஒன்று, ஐந்து, ஒன்பது, பதினேழு, இருபத்தைந்து, முப்பத்து மூன்று எனக்குண்டங்கள் அமைக்கலாம்.
- யாக பூஜைகள் - யாக பூஜைகள் இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, எனும் காலாங்களில் நடைபெற வேண்டும்.

- ஸ்தூபிஸ்தாபனம் தீபஸ்தானம் யந்திரஸ்தாபனம் விம்பஸ்தாபனம்- தூபி, விளக்கு, யந்திரம், விக்கிரங்கள் முதலியவற்றை உரிய இடத்தில் வைத்தல்.
- அஷ்டபந்தனம் - மருந்துகள் சார்த்துதல்
- தைலாப்யாங்கம் - எண்ணை சார்த்துதல்
- விம்ப சுத்தி - விம்பத்தை மந்திரத்தால் புனிதப்படுத்தல்
- ஸ்பர்சாகுதி - விம்பம், கும்பம், அக்னி என்பவற்றை தொடர்புபடுத்தல்
- மகா பூர்ணாகுதி  அக்னியில் பூரணமான ஆகதியை வழங்குதல்
- தச தர்சனம் - பசு, ஆசாரியார், கண்ணாடி, பூரண கும்பம், தீபம், கன்னி, சன்னியாசி, சுமங்கலி, எஜமான், பக்தர்கள் எனும் மங்களங் களைத் தரிசனம் செய்தல்.
- மண்டலாபிஷேகம் - 45, 24, 15, 12 எனும் நாட்களில் செய்தல்

**03. சங்காபிஷேகத் தத்துவம்**

சங்கினால் செய்யப்படும் அபிஷேகம் சங்காபிஷேகம் ஆகும். மண் குடத்தை விட செப்பினால் செய்யப்பட்ட குடம் 1000 மடங்கு விஷேசமானது. அதனிலும் வெள்ளியினால் செய்யப்பட்ட குடம் 10000மடங்கு விஷேசமானது. பொன்னால் செய்யப்பட்ட குடம் 200,000 மடங்கு விஷேசமானது. இரத்தினத்தி னால் செய்யப்பட்ட காண்டாமிருகொம்பு அதைக்காட்டிலும் இருமடங்கு விஷேசம். அதைகாட்டிலும் கடலில் தேங்கியசங்கு கோடி மடங்கு விசேடம் என ஆகமங்கள்  கூறுகின்றன.

சங்கின் அதிதேவதைகள் - சூரிய சந்திரர்கள்
மத்தியில் - வருணன்
நுனியில் - கங்கா, சரஸ்வதி
அடியில் - பிரமன்
நடுவில் - புண்ணிய தீர்த்தங்களும் வீற்றிருக்கின்றன.

சங்காபிஷேகம் அஷ்டோத்திர சதம் 108. அஷ்டோத்திர சகஸ்ரம் - 1008 எனும் இரு வகையில் நடைபெறும். வலம்புரி, இடம்புரி எனும் இருவகைச் சங்குகள் உண்டு.

**உற்சவ காலங்களில் வாசிக்கப்படும் இராகங்கள்**

- தீபாராதனையின் போது  மிஸ்ரமல்லாரி, தேவாரம், திருப்புகழ்,
- யாகசாலை வரை சுவாமியுடன் - மல்லாரி
- கோபுரவாசல் வரை - திரிபுடதான மல்லாரி
- கோபுரவாசல் முதல் வெளிவரை - தோடி, நாட்டை
- வீதிகளில் - ராகம், பல்லவி, கீர்த்தனை

- கோவிலுக்குள் - துரித காலத் திரிபுடை மல்லாரி
- பள்ளியறைக்கு எழுந்தருளும் போது - ஆனந்த பைரவி கேதார கௌளை
- பள்ளியறையில் - நீலாம்பரி

**தர்ப்பையின் சிறப்பு**

தர்ப்பை விதைபோடாமல் வளர்வதாகும். இது புனிதப்படும் ஒரு உன்னதப்பொருளாக கருதப்படுகிறது. தர்ப்பை ஒன்பது வகையாகக் கூறப்படுகிறது.

விஸ்வாமித்ரம், யவை, வழல், குஸம், அறுகு, காஸம் (நாணல், கோதுமை, முஞ்சிப்புல்

**நெற்பயிர்**

இவற்றில் ஒன்றை தர்ப்பையாக பயன்படுத்தலாம் தர்ப்பை நுனியுள்ளதாகவும் நீளமானதாகவும் இருக்க வேண்டும். நகங்களால் கிள்ளப் பட்டதும் நெருப்பால் கொளுத்தப்பட்டதுமான தர்ப்பைகளை ஒருபோதும் உபயோகிக்க கூடாது.

**பவித்திர இலக்கணம்**

நுனியுள்ள நீளமான இரண்டு தர்ப்பைகளை வலமாக முறுக்கி மத்தியில் மடித்து அடி நுனிகளை ஒன்றாக சேர்த்து பிரணவத்தினால் முடிய வேண்டும்.

பவித்திரத்தின் நுனி 4 அங்குலம்

முடிச்சு 1 அங்குலம்

வலயம் - 2 அங்குலம் இருக்க வேண்டும்.

பவித்திரம் வலதுகை மோதிரவிரலில் அணியவேண்டும். பவித்திரத்தை அணிந்த பின்பு கையிருந்து அதை கழற்றினால் வலது காதில் தரித்துகொள்ள வேண்டும் வேறு எந்த இடத்திலும் வைக்கக்கூடாது.

- தேவகார்யங்களுக்கு 2 தர்ப்பையாலான பவித்திரமும்
- பித்ரு கார்யத்திற்கு 3 தர்ப்பையாலான பவித்திரமும்
- தகனம் முதல் 15 மாசிகம் வரை 1 தர்ப்பையாலான பவித்திரமும் தரிசிக்க வேண்டும்.

**ஆக்கம் – வரதவேல் மிதூர்ஷா**

# காத்தவராயன் பாடல்

அன்பு வடிவானவனே காத்தவராயா
அனைத்து குறை தீர்திடுவாய் காத்தவராயா
எல்லையிலே வீற்றிருக்கும் காத்தவராயா
எல்லையில்லா இன்பம் தரும் எங்கள் காத்தவராயா
(அன்பு வடிவானவனே)

தொல்லைகளை நீக்கி வைக்கும் காத்தவராயா
இல்லை என்று கூறாமல் அள்ளி வரம் அருளும் காத்தவராயா
சூலத்துடன் எங்களை காவல் செய்கின்றாய் காத்தவராயா
ஞானமெல்லாம் ஒளி விளக்கை தந்திடுவாய் காத்தவராயா
(அன்பு வடிவானவனே)

அன்புடன் அருள் கொடுக்கம் காத்தவராயா
தென்புடன் ஏங்கி நிற்கின்றோம் காத்தவராயா
இன்புடன் காவல் தரும் காத்தவராயா
பண்புடன் நலம் வேண்டி பணிகின்றோம் காத்தவராயா
(அன்பு வடிவானவனே)

**ஆக்கம் : தர்மாசிரியர் செ.சுரேந்திரா**

# உடல் உள வலிகளாலும் வேதனைகளாலும் பெரும் ஆலயமாகியது காத்தவராயர் தேவஸ்தானம்

ஆதிகால மக்களின் வாழ்வியலில் நம்பிக்கைகளில் கிராமியத் தெய்வவழிபாடு முக்கியமானதொன்றாகும். அந்த வகையில் அல்வாயின் வட எல்லையில் மக்களின் காவலனாக காத்தவராயர் அமர்ந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றார். கிட்டத்தட்ட ஏழு பரம்பரைகளின் வழித்தோன்றலாக காத்தவராயர் வழிபாடு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

ஆரம்ப காலத்தில் ஒதிய மரத்தின் கீழே சூலமாக வடிவமைக்கப்பட்ட காத்தவராயர் இன்று மூலஸ்தான மூர்த்தியாக வரசித்தி விநாயகரை அமர்த்தி உடனுறை காத்தவராயர் தேவஸ்தானம் எனும் ஆலயமாக உருப்பெற்றிருப்பது சாதாரண விடயமன்று. இது இறைவன் மீது அளவற்ற நம்பிக்கை கொண்ட ஒருவனின் முயற்சியால் இறைவன் கிருபையால் உருவானதே. அதாவது இவ்வாலய அபிவிருத்தியில் பரணீதரன் எனும் தனிமனித சக்தியின் உடல் உள உழைப்பு பின்புலமாக அமைந்திருக்கின்றது என்பதை யாராலும் மறுக்க முடியாது. காலத்தினாலும் மறக்கப்பட முடியாததொன்று.

இவ் ஆலய வரலாற்றின் 6 ஆவது வழித்தோன்றலான க.பரணீதரனின் காலத்திலேயே இவ்வாலயத்தில் பெரும்பாலான மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. ஆரம்ப காலத்தில் நித்திய விளக்கேற்றலுடன் ஆனி உத்தரப்பொங்கல் விழாவும், திருவெம்பாவைப் பூசைகளும் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆனி உத்தரப் பொங்கலின் போது இவ் ஆலய வழித்தோன்றல் பரம்பரையினர் பொங்கல், கடலை, கஞ்சி, குழைசாதம் எனப் பல பிரசாதங்களை இரவோடு இரவாக செய்து அதிகாலையில் சூரிய உதயத்தோடு வழிபாடு ஆரம்பித்து பல மக்களின் நேர்த்திக் கடன்களோடு பூசை நிறைவடையும் அன்றைய கால சூழலில் அல்வாயூரின் பெரும்பாலான மக்கள் இதில் கலந்து கொண்டு அருள் பெற்றனர்.

திருவெம்பாவைப் பூஜையும் அவ்வாறே பத்து நாட்களும் கொண்டாடப்படும் இவை இன்றுவரை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன.

2010 ஆம் ஆண்டிலிருந்து(10.5.2010) காத்தவராயர் ஆலயமானது புதுப்பொலிவு பெற்று இந்தியாவிலிருந்து சிவத்திரு சோமாஸ்கந்தராஜக்

குருக்களால் பரணீதரனுக்கு வழங்கப்பட்ட வரசித்தி விநாயகரை மூலஸ்தான மூர்த்தியாக்கி காத்தவராயர் உடனுறை தெய்வமானார். இதன் போது நான்கு தள மண்டபங்களுடன் ஆலயம் புதுப்பொலிவு பெற்றது.

பரணீதரன் அன்னாதானம் செய்து இறைவனை மகிழ்விப்பதில் மகிழ்படைபவர். அவ்வாறு அன்னதானம் மேற் கொள்ளும் போது இருந்து சாப்பிடுவதற்கு ஒரு இடம் இல்லாது மக்கள் வெயிலில் படும் பாட்டை கண்ணுற்று வேதனையடைந்து முதன்முதலாக மடப்பள்ளிக்கு பக்கத்தில் இரு தூண்கள் இட்டு சிறிய தொரு மண்டபத்தைதனது செலவில் ஆக்குவித்தார். தொடர்ந்து நடு மண்டபம் மிகுந்த பொருட் செலவின் வங்கியில் கடன் பெற்று போடுவித்தார். பின்னர் வசந்த மண்டபம், வெளி வில் மண்டபம் என்பன வங்கியில் கடன் பெற்றும், சில அடியார்களின் சிறு தொகை உதவியுடன் கட்டுவித்தார். இவ்வாறு ஆண்டு தோறும் ஏதாவது ஒரு புதுக் கட்டடத்தை ஆக்குவித்து இன்று இக்கோயிலை இவ்வாறானதொரு பிரமாண்டமான கோயிலாக ஆக்கியுள்ளார்.

2019 ஆம் ஆண்டு பரணீதரனின் கனவில் தோன்றிய காத்தான் “எனக்கு திருவிழாச் செய்” எனக் கூறியுள்ளார். பரணீதரன் மகிழ்வுற்று காத்தானின் பரம்பரையில் வந்தவர்களை அழைத்து திருவிழா ஆரம்பிக்க உள்ளோம், ஒவ்வொருதரும் ஒரு திருவிழா எடுங்கள் கேட்டு கொண்டார். அதன் பிரகாரம் ஒவ்வொரு திருவிழா திருவிளக்கு சீட்டு மூலம் பங்கிடப்பட்டது. ஒவ்வொரு வருடமும் ஆவணிமாத தேய்பிறைப் பூசத்திற்கு எம்பெருமானுக்கு தீர்த்தோற்சவம் அமையும் வகையில் திருவிழா கொண்டாடப்பட்டு வருகின்றது. முதலாவது பிள்ளையார் எழுந்தருளியை பரணீதரன் உபகரித்தார். வைரவர் த.கலாமணி அவர்களாலும் மகாவிஷ்ணு க.முரளிதரனாலும் புதிதாக அமைக்கப் பட்டு திருவிழா ஆரம்பிக்கப்பட்டது. கிட்டத்தட்ட 125 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் உபயகாரர்களாக இருக்கின்றார்கள். 2019 ஆம் ஆண்டு திருவிழாவின் பின்னர் மாதத்திற்கு ஒரு தடவையாவது எழுந்தருளி உலா வரவேண்டும் என்ற எண்ணத்தில் ஒவ்வொரு மாதமும் வருகின்ற பூசப்பூசை கொண்டாடப்பட்டு வருகின்றது. இதனையும் ஒவ்வொருவர் எடுத்து செய்து வருகின்றார்கள்.

ஒவ்வொரு வருட அலங்கார உற்சவங்களின் போதும் மிகச் சிறப்பாக பரணீதரனின் தனிப்பட்ட முயற்சி காரணமாக எங்கடை ஊரவர்களுக்கு பல நிகழ்வுகள் காண்பிக்கப்படுகின்றது. அதாவது நாடகங்கள், சொற்பொழிவுகள், கலை நிகழ்வுகள், நடனங்கள், இசைக் கச்சேரிகள், பேச்சு, பஜனை என பல நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த பேச்சாளர்களும் நாடககாரர்களும் இதில் பங்கு பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் காத்தவராயர் ஆலய திருவிழாவின் நிகழ்வுகளின் இன்னொரு

சிறப்பம்சமாக கிருஷ்ணஜெயந்து விழா கொண்டாடுவதனையும் கூறிக் கொள்ளலாம். அன்றைய தினம் ஊரிலுள்ள சிறுவர், சிறுமியர் கிருஷ்ணன், ராதையாக வேடமளித்து இவ் ஆலய முன் மண்டபத்தில் தவழ்ந்து போய் வெண்ணெய் உண்ணும் காட்சி நடைபெற்று வருகின்றது. ஆண்டு தோறும் பல குழந்தைகள் இவ்வாறு வேடம் தரித்து அடியார்களை மகிழ்விக்கின்றார்கள். மேலும் நடுச்சாமம் 12 மணிக்கு கிருஷ்ணன் பிறப்பு விசேட அபிஷேகத்துடன் நடைபெற்று வருகின்றது. அடியார்கள் காத்தவராயர் ஆலயத்தின் உட்பிரகாரத்தை 108 தடவை சுற்றி வந்து கிருஷ்ணனுக்கு பூப்போட்டு நேர்த்தி செய்வார்கள்.

வெளிவீதி வலம் வருவதற்கு முன்புற வடமேற்கு வீதி இல்லாமல் இருந்த போது பரணீதரன் உரியவர்களிடம் ரூபா 150000.00 கொடுத்து கோயிலுக்காக பெற்றுக் கொண்டார். மேலும் இவ்வாலய அபிவிருத்தியில் வில் மண்டப கோபுரமும் சிறகு மண்டபமும் மிகுந்த பொருட் செலவில் பொன்னையா தருமசோதி அவர்களால் நாகமுத்து தங்கம், பொன்னையா மாணிக்கம் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டது. கூரைக்கான பனைமரங்கள் தவனேஸ் வரன் தர்மஸ்ரீ அவர்களால் வழங்கப்பட்டது. சிறகு மண்டப 6 திருவாசிகள் பரணீதரனால் மேற்கொள்ளப்பட்டது. பாவைகளை அடியார்கள் உபகரித்தார்கள். பூங்காவனத்தின் போது சுவாமி இருக்கைக்கான தாமரை மலர் ஆசனம் பிரேமதாசன் மங்கையர்கரசி தம்பதியினரால் குணரத்தினம் பத்மாவதி நினைவாக அமைக்கப்பட்டது. கஜலக்ஷ்மி ஆலயம் விநோத் காயத்திரி, மகள் ஆத்மிகா ஆகியோரால் உவந்தளிக்கபட்டது. விநோத் அவர்கள் குதிரை வாகனத்தை உபகரித்திருந்தார். வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமி ஆலயம் அமைக்கப்பட்டது. சில திருவிழா உபயகார்களின் உதவியுடன் பரணீதரன் விஷ்ணுவர்த்தினியின் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமிகள் உபகரிப்புடனும் பெரும்பங்களிப்புடனும் நிறைவேறியது. வைரவர் பண்டிகையும் சிமேந்துக் கலசமும் பரணீதரன் விஷ்ணுவர்த்தினியால் புனருத்தாரணம் செய்யப் பட்டது. நிருத்திகள் பூங்கா அமைக்கப்பட்டது. சகடை காத்தவராயர் ஆலய பெண் அடியார்களால் உபகரிக்கப்பட்டது. நவரத்தினம் சத்தியவதி தம்பதிகளால் நாகதம்பிரான், வேலு சோதிடர், தம்பையா, தணிகாசலம் இராஜேஸ்வரி ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டது. சுந்தரவேல் சகிலா தம்பதிகளால் சண்டேஸ்வரர் சுவாமியும் அமைக்கப்பட்டது. இன்று 5 சுற்றுப்பிரகாரங்களுடன் ஆலயம் கண்கொள்ளா அழகாக காட்சி தருகின்றது.

2023 ஆம் ஆண்டு மகாகும்பாவிஷேக 21 ஆம் நாளின் போது வரசித்தி விநாயகர் ஊர்வலம் வந்து போது அதன் சிறப்பம்சமாக குதிரை ஆட்டம் மேற் கொள்ளப்பட்டது. இதன் போது ஆடப்பட்ட இரு பெரும்

குதிரைகளை காரைநகரில் இருந்து பரணீதரன் அவர்களால் தனியே மோட்டார் சைக்கிளில் மிகுந்த உடல், உள வேதனையோடு 50கிலோ மீற்றருக்கு மேற்பட்ட தூரத்தில் இருந்து கொண்டு வரப்பட்டதோடு திருப்பியும் கொண்டு போய் சேர்த்தார். இது கூட காத்தவராயரின் அருள் இன்றி நடந்திட வாய்ப்பில்லை. அன்றைய தினம் பெரும் சிரமத்தின் மத்தியில் பயணித்த அவரை காத்தவராயர் கைவிடவில்லை.

ஆலய முதல்வருக்கு மட்டுமன்றி தன்னை நம்பி வருகின்ற அடியவர்களையும் காத்தவராயர் கைவிடுவதில்லை. பலர் தமது நேர்த்திக் கடன்களை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள். பலருக்கு வேண்டியதை இறைவன் வழங்கிக் கொண்டு இருக்கின்றான். அவற்றை அவர்கள் தான் திறந்த மனத்துடன் சொல்ல வேண்டும்.

காத்தவராயர் ஆலயத்தின் சிறப்பம்சமாக அமைபவர்கள் அயலில் வாழும் பெண்கள். அயலில் வாழும் பெண்கள் மிகுந்த சிரத்தையுடன் ஆலயத்தின் வளர்ச்சியில் பங்கொடுத்து ஒவ்வொரு நிகழ்வுகளையும் வெற்றியுடன் நிகழ்வுறச் செய்து வருகின்றார்கள். ஆலயத்திற்கு ஒரு சகடை தேவையென்ற நிலை ஏற்பட்டபோது அயலில் உள்ள பெண்கள் சேர்ந்து பணத்தினை சேர்த்து பரணீதரனிடம் கொடுத்து ஆலயத்திற்கான சகடையை உபகரித் திருந்தார்கள். அந்த சகடையின் முக்கியத்துவமும், அதன் சிறப்பும் நாம் கண்ஊடாகப் பார்த்து வருகின்றோம். எல்லாம் அவன் செயல். ஆலயத்திற்கு தேவையான குடை, களாஞ்சிகள், சில ரியூப் லைலற், சல்லாரி, குத்து விளக்கு, திருகுவலகை , சில பாத்திரங்கள் என்பனவும் அடியார்களால் அன்பளிப்பு செய்யப்பட்டு வருகின்றது. மேலும் ஆண் அடியார்கள் சிலரின் பங்களிப்பு என்றும் மறந்துவிடமுடியாததொன்று. தொடர்ந்து அவர்கள் பரணீதரனுடன் சேர்ந்து இயங்கி ஆலயத்தின் விழாக்களை சிறப்படைய செய்ய முன்னிற்கின்றார்கள். எந்த வேறுபாடு உயர்வு தாழ்வு இன்றி அனைவரும் ஒத்து இறை பணியாற்றுவதை இந்த ஆலயத்தில் காணக் கிடைப்பது சந்தோஷத் திற்குரியது.

ஆனி உத்தரப் பொங்கலின் போது பரணீதரனால் 40000 செலவில் ஆண்டு தோறும் காத்தவராயன் கூத்து மேடையேற்றப்பட்டு வருகின்றது.

இங்கு திருவிழா ஆரம்பித்த காலந்தொடக்கம் வரசித்தி விநாயகர் இருபக்க வீதியே வலம் வந்தார். பல மெய்யடியார்கள் இவ் ஆலயத்திற்கு நான்கு பக்க வீதியானது வேண்டும் என காணிக்குரியவர்களிடம் பல்வேறு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு அது பலனளிக்கவில்லை. ஆனாலும் பரணீதரன் சற்றும் மனந்தளராது காத்தவராயர் ஆலயத்திற்கு 4 பக்க வீதி கிடைத்தேயாக வேண்டும் என்று பல்வேறு வழிகளில் முயன்று இறுதியாக காத்தவராயருக்கு வீதி இந்த ஆண்டு கிடைத்தே ஆக வேண்டும் என்று

விடாப்பிடியாக நின்றார். இவரது வேண்டுதலும், கடும் பிரயத்தனமும் கடவுளுக்கு கேட்டிருக்க வேண்டும் என்பதற்கிணங்க ஒரு கிழமை முன்னர் திரு சி.திருஞானசம்பந்தன் அவர்கள் ஆலயத்திற்கு வருகை தந்து தெற்கு வீதியை கோயிலுக்கு என உபகரித்தார். அதுமட்டுமன்றி மேற்கு பக்க வீதியை பெற்றுத்தர முயன்று வெற்றி கண்டார். திரு திருஞானசம்பந்தன் அவர்கள் நிற்கும்போது பின்புற வீதியை சுற்றும் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் ஒரு வேலையாளுடன் பரணீதரன் நின்று வீதியை 5 மணித்தியாலத்தில் ஒழுங்கமைத்தார். முழுவீதி வந்தால் அந்த அன்றே அங்கப்பிரதிஷ்டை செய்வேன் என நேர்த்தி வைத்த பரணீதரன் கற்களாலும் முற்களாலும் நிரம்பிய வீதியில் முதன்முதலாக சுவாமி வீதிவலம் வரும் போது தனது உடல்நோய்களையும் பொருட்படுத்தாது அங்கப் பிரதிஷ்டை செய்தார்.

ஆலய முதல்வர் பரணீதரன் அவர்களது பூசைக்காலத்தில் சிறு கிராமிய தெய்வமாக இருந்து காத்தவராயர் ஆலயத்தினை இத்தகைய நிலைக்கு கொண்டு வருவதற்கு பலநூறு உடல் உடல வேதனைகளை இவர் அனுபவித்திருந்தார் என்பதை யாராலும் மறுக்க முடியாது. இது ஒரு சிறு கிராமியத் தெய்வந்தானே?, இதற்கு ஏன் திருவிழா?, ஏன் இங்கு உபகரிப்பு செய்கின்றீர்கள் வேறு கோயிலுக்குசெய்யலாந்தானே? இது ஒரு தனிப்பட்ட கோயில்தானே? என பல்வேறுபட்ட ஏளன, கேலிப் பேச்சுக்கெல்லாம் சற்றும் மனந்தளராமல் பரணீதரன் இவற்றினை எல்லாம் சவாலாக எதிர்கொண்டு தன் மனதில் நினைத்ததையெல்லாம் செய்து முடித்து வருகின்றார். தனி மனித முயற்சியால் அடியார்களின் ஒன்றிணைவால் வளர்ந்ததே இந்த ஆலயம்.

இந்த ஆலயத்தில் அனைத்து அடியார்களும் சமமாகவே மதிக்கப்பட்டு வருகிறார்கள். ஆலயத்திற்கு வருபவர்கள் அனைவரையும் அரவணைத்து செல்லும் ஆலயம்.

எத்தனை கஷ்ரங்கள், புறக்கணிப்புகள், கேலிப்பேச்சுகள், உளரீதியான புண்படுத்தல்கள், உடல் நோய்கள், வாய்க்கு வந்தபடி புறம் சொல்லுபவர்கள் என எதனையும் பொருட்படுத்தாது இறைவனுக்கு வேண்டியவற்றை செய்து வருகின்றார் பரணீதரன். அவருடன் துணை நிற்கும் ஆண்களும், பெண்களும் என்றும் நன்றிக்குரியவர்கள். இவ்வாலயத்தில் அனைவரும் ஒரு புரிந்துணர்வுடன் நடந்து கொண்டிருப்பது சிறப்பானது. எந்த இக்கட்டான நிலையிலும் காத்தான் நடாத்துவிப்பான் என்ற பரணீதரனின் நம்பிக்கையை காத்தான் என்றும் வீண் போகச் செய்யவில்லை. பரணீதரனின் சொப்பனத்தில் காட்சி தரும் விடயங்களை பரணீதரன் முயன்று செய்வித்து வருகின்றார். இன்னும் என்னவெல்லாம்

வருமோ? அது அந்த இறைவனுக்கே தெரியும். இவ் வருடம் நான்கு சுற்றுப் பிரகாரங்களுடன் புதிய வீதிகளில் காத்தவராயர் முழு நிறைவுடன் திருவிழாக் காண்பது மிக்க மன மகிழ்விற்குரியது.

சிலருக்கு இக்கட்டுரை தன் கணவனை மனைவி புகழ்வது போல படலாம். ஆனால் உண்மைகள் சொல்லப்பட வேண்டியவை என்னும் நோக்கில் இங்கு சொல்லப்பட்டுள்ளன.

காத்தவராயரை நம்பினோர் கைவிடப்படார்.

வடஎல்லையில் நின்று காத்தருளும்
காத்தவராயரே போற்றி! போற்றி! போற்றி.

**ஆக்கம் : பரணீதரன் விஷ்ணுவர்த்தினி**